1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைய தகைமைகள் மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இப்பதவிக்கு I ஆம் தரத்தின் சட்ட அலுவலர்களுள் சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் நியமிக்கப்படும். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் பிரதான சட்ட அலுவலர் பதவிக்கு தகுதியானவர்கள் காணப்படாதவிடத்து அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்துக்குரிய சட்ட அலுவலர்களுள் சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. அத்துடன், நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறைகளுக்கு ஏற்ப நீங்கள் அதற்கான உதவித்தொகை செலுத்த வேண்டும்;

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்;

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு முறைகளுக்கும், திணைக்களத்தினால் விடுக்கப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் கட்டுப்படுவதாக இப்பதவி இருக்கும்.

03. **தகைமைகள் :**

3.1 **தொழிற்தகைமைகள்**.- அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்துக்குரிய சட்ட அலுவலராக இருத்தல் வேண்டும்.

3.2 **உடற்தகைமை**.- இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளை செய்வ தற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.3 **ஏனைய தகைமைகள் :**

- விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;
- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும் ;
- சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

* சேவைக்கு இணைத்துக்கொள்ள தேவையான சகல தகைமைகள் கொண்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

* ஆங்கில மொழியை திறமையாக கையாளக்கூடியவராக இருத்தல்.

4. **வயதெல்லை**.- ஏற்புடையதல்ல.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இல் அட்டவணை I இன் பிரகாரம் இப்பதவிக்கு உரித்தான மாத சம்பளம் ரூபா 76,175 - 16 × 2,170 - ரூபா 110,895 = (SL-01-2016) (I ஆம் தரத்தின்) ஆகும். அச்சுற்றறிக்கையின் II ஆவது அட்டவணைக்கு அமைய உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

6. தரத்தை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித்திட்டத்திற்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும்.

| விடயம் | | அதிகூடிய புள்ளி | தெரிவு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளி |
|---|---|---|---|
| 01. சேவை அனுபவம்<br>I தரத்தில் சேவைக்காலத்திற்காக ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம், 06 மாதத்திற்கு 2.5, 03 மாதத்திற்கு 1.25 புள்ளிகள் வீதம் | | 50 | தகுதியை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமைக்கு அமைய கூடிய புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவர். |
| 02. திறமை<br>i. கல்வித் தகைமை (அதிகூடிய)<br>- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பாக பெற்றுக்கொண்ட<br>- PhD பட்டத்திற்கு அதிகூடியது<br>- பட்டப்பின் பட்டம் அல்லது M.Phil பட்டத்திற்கு அதிகூடியது<br>- பட்டப்பின் பட்ட டிப்ளோமாவிற்கு அதிகூடியது | 12<br>10<br>08 | 30 | |
| ii. சட்ட விடயம் தொடர்பாக வெளிப்படுத்தும் திறமை<br>- விடயத்துடன் தொடர்பான நேர்முகப்பரீட்சையின் போது வழங்கப்படும் சட்டரீதியான சிக்கல்களை தீர்த்தல்<br>- சட்ட துறையில் நவீன போக்குகள் பற்றிய அறிவு | 07<br>03 | 10 | |
| iii. நேர்முகப்பரீட்சையின்போது வெளிப்படுத்தப்படும் திறமை<br>- பொது அறிவு மற்றும் விவேகம்<br>- தெளிவான கருத்துக்களை முன்வைக்கும் திறமை மற்றும் ஆளுமை | 05<br>05 | 10 | |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்** :

சகல விதத்திலும் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகைமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த கீழுள்ளவற்றுள் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்** :

(i) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ளது. விண்ணப்பங்கள் A4 அளவைக்கொண்ட தாளில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், 01-05 வரை முதல் பக்கத்திலும், 06 - 08 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட வேண்டும். அதற்குரிய விபரங்கள் தமது சொந்த எழுத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 47,615 மாதாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றும் அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் நிறுவனத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) மாதிரிப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதித்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறே, விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய நியதிகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் காணப்பட்டால் அதன் போது சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

11. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் இருத்தல் தொடர்பான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் விதிமுறைகளுக்கு அமைய,

வசந்த பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச
வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2019, ஓகத்து 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் நிறைவேற்று சேவை வகைக்குரிய (பிரதான சட்ட அலுவலர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2019

வதிவிட மாவட்டம் [ ]

01. 1.1 விண்ணப்பதாரியின் பெயர் (திரு./திருமதி/செல்வி) :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. உ-ம் Mr./ ~~Mrs/ Miss~~ : SILVA A. B

1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் :----.
(சிங்களம்/தமிழில்) :----.

02. 2.1 முகவரி (தனிப்பட்டது) :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 முகவரி (தனிப்பட்டது) :-----.
(சிங்களம்/தமிழில்) :----.

2.3 முகவரி (அலுவலகம்) :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 முகவரி (அலுவலகம்) :-----.
(சிங்களம்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனம் ஒன்றில் பணிபுரியும் அலுவலர்கள் அவர்களின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதாவது மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

03. 3.1 பிறந்த திகதி :----.

| ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

3.2 விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது:-
வருடங்கள் :...................... மாதங்கள் :...................... நாட்கள் :......................

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

05. பால் (ஆண்/பெண்) :----.

06. தகைமைகள் : நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தர சட்ட அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி
6.1. சேவை அனுபவம்
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

6.2. உரிய கல்வித் தகைமை/தகைமைகள்
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

07. விண்ணப்பதாரரின் உறுதிமொழி :-

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதிமொழிகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பிற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் எனவும், பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

08. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி ......................................... என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் ................................ ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன் உறுதி செய்தல் வேண்டும்)

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

09. திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு மாத்திரம்) :

இந்த விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ......................................... இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் ................................ ஆந் திகதியிலிருந்து பணியாற்றுகிறார். அவர் நிரந்தரமானதும் ஒய்வூதியமுடைய துமான/ தற்காலிகமான பதவி ஒன்றினை வகிக்கின்றார். கடந்த ................. வருட காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும், அவர் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை (எச்சரிக்கை தவிர்ந்த) என்றும், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டது என்றும், அதன்படி அவை அனைத்தும் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும், ............... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
திகதி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

09-143

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதித் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – நில அளவைக் கள உதவியாளர்கள்

1.0 நிலஅளவைத்திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதித் தேர்ச்சி பெற்ற சேவை தொகுதியில் (PL02-2016) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | ஆட்சேர்ப்புத் தரம் | வெற்றிடங்கள்/பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நிலஅளவைக்கள உதவியாளர் | தரம் III | 35 |

1.2 பதவிக்கான கடமைகளின் தன்மை

| பதவிப் பெயர் | முக்கிய அலுவல்கள் |
| --- | --- |
| நில அளவைக்கள உதவியாளர் | • அளவை தொடர்பான பருவரைபடம் கீற உதவுதல்.<br>• அளவைப்புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளைத் தயாரித்தல்.<br>• அளவைதொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்ப்படுத்தல்.<br>• நிலஅளவை தொடர்பான பீடக்குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நிலஅளவையாளர்களுக்கு உதவுதல்.<br>• களத்தில் அளவைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பேணவும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்புப் பணிகளில் உதவுதல்.<br>• தியோடோலைட்டுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமானிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்குக் களத்தில் அளவைப்புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல்.<br>• வான் ஒளிப்படப்பிடிப்பிற்கு தேவையான புவிபார்த்த பார்வைப்புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல்.<br>• அளவைத்தரவுகளைச் சேகரிக்கவும் அளவைகளில் தெரிவுசெய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்குத் தேவையான இலக்குகளையும் அட்டவணைகளையும் முறையாகப் பேண உதவுதல்.<br>• அளவை நடவடிக்கைகளில் சரியான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக்குறிகளையும் நிறுவுதல்.<br>• புலவேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்<br>• நிலஅளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நிலஅளவைதொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல்.<br>• நிலஅளவை களஉதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவிவகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நிலஅளவை கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும். |

2.0 நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத்திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம்**.- இலக்கம் 03/2016 மற்றும் 2016-02-25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்று நிருபத்திற்கு இணங்க நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையின் III, II, I மற்றும் விசேட தரங்களுக்கான உரிய மாதாந்த சம்பளப் படிமுறை ரூபா 25,250 - 10× 270 -10× 300 - 10× 330 - 12× 350 - ரூபா 38,450 ஆக இருப்பதுடன் இந்தச் சம்பளம் தங்களுக்கு உரித்துடையதாக ஆவது 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் ஆகும். மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் உபஅட்டவணை II ஒழுங்கு விதிப் பிரகாரம் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி முதல் சம்பளம் வழங்கப்படும்.

4.0 இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பரீட்சையில் நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையில் III தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலருக்கு உரித்தான ஓய்வூதியம், ஓய்வூதிய முறைமை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் தொழில்சார் தீர்மானங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படும். இந்த நியமனம் 03 மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை ஆற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் உள்ள அரச சேவை நியமனங்களுக்கு உரியதான பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5.0 **தகைமைகள்** :-

5.1 கல்வித் தகைமைகள்

(அ) கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமைகள்.-**

நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **ஆகக் குறைந்த நிபுணத்துவம்**

(அ) நில அளவைக் களத்தை இனங்காண உதவுதல்

(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்

5.4 **உடல் சார் தகைமைகள்**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் இப்பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை**

I. ஓர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

III. பதவிக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 **வயது**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களிற்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல)

6.0 **பிழையான தகவல்கள்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை யில்லையெனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு தகவலை அது பிழையெனத் தெரிந்து கொண்டு சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

7.0 **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துப்பரீட்சை மற்றும் தகைமைகளை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம்.

**பரீட்சைப் பாடத்திட்டம்.-** இப் பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்து மூலப்பரீட்சை ஆகும். இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப் புள்ளிகளின் அளவு | சித்தியெய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1. பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலம் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடமும் |

7.1 **பாட விதானம்**

(i) **பொது அறிவு**: இவ் வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும்.

(ii) **நுண்ணறிவு**: இது விண்ணப்பதாரரின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானமெடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

8.0 **தெரிவு முறை**.-

8.1 நில அளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரிசோதன செய்யும் பொருட்டு மட்டும் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு, பின்னர் எழுத்துப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் திறமையின் ஒழுங்கில் மட்டும் தரம் III இற்கான நில அளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

வெற்றிடங்களின் எண்ணிக்கைபடி நில அளவையாளர் தீர்மானிக்கப்படும் விண்ணப்பத்தாரிகளின் எண்ணிக்கையை தகைமைகளை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

சேர்த்துக் கொள்ளப்படும் நில அளவைக் கள உதவியாளர்களிற்கு ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி நில அளவைத் திணைக்கள பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும்.

**9.0 விண்ணப்பப் படிவங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்**.-

(அ) இவ் அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 21x29cm (A4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பதாரிகள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இல. 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இல. 06 முதல் இல. 08.2 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் இல 09 முதல் 13 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும் இல. 14 முதல் 15.2 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரசகூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றை தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணபத்திற்கு அமைவாக இல்லாத உரிய தினத்திற்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் பிரதிபலன்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கிறதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்படுகின்றதென அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

9.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி 05 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தியவர்கள் மாத்திரமே விண்ணபிக்கலாம். பரீட்சைக்கட்டணத்தைச் செலுத்தி 2019.09.27 அன்றோ அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிற்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப் பதவிக்கான தகைமையுள்ளவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக்கூடாது.

9.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதித் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்" எனத்தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், பொலிஸ்சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர், அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 03/2016 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களில் உள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

*10.* **பரீட்சைக்கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். இத்தொகையைக் கொழும்பு- 05 கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*11.* **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.09.27 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை),
நில அளவைத்திணைக்களம்,
கொழும்பு - 05.

*12.* **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

*13.* **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
II. தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;
III. செல்லுபடியான கடவுச்சீட்டு.

*14.* இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நில அளவையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப்பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

எச். எம். பீ. பீ. சங்கக்கார,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத்திணைக்களம்,
கொழும்பு - 05,
2019, செத்தெம்பர் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதிதேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - நில அளவைக் கள உதவியாளர்கள்

(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

01. பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழிமூலம் :- ☐
(சிங்களம் -S, தமிழ் -T, ஆங்கிலம் - E )
(தரப்பட்ட கூட்டினில் குறியீட்டை /இலக்கத்தை இடவும்)

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி)
தமிழில் ..............................................................................................................................
..............................................................................................
ஆங்கிலத்தில் ........................................................................................................................
....................................................................................................

02.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)
தமிழில் ..........................................................................................................................
......................................................................................................
ஆங்கிலத்தில் ...................................................................................................................
.............................................................................................................

03. தேசிய ஆள் அடையாளஅட்டை இல. : ................................................................

04. பிறந்த திகதி:
ஆண்டு:................ மாதம் :................ திகதி :................

04.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் :................ மாதங்கள் :................ நாட்கள் :................

05. பால் :- (ஆண்-M, பெண்-F) ☐

06. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்)
தமிழில் ..............................................................................................................................
..............................................................................................
ஆங்கிலத்தில் ........................................................................................................................
....................................................................................................

06.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் ..........................................................
(உப அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

மாவட்ட இலக்கம் ☐ மாவட்டத்தின் பெயர் ☐

06.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள்?..............................................

07. தொலைபேசி இலக்கம் (நிரந்தர): ....................... கையடக்கத் தொலைபேசி:................

08. கல்வித் தகைமைகள்:

08.1 க.பொ.த (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள்:-
முதலாவது அமர்வு:-

I. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்:.............................
II. சுட்டிலக்கம்:......................
III. சித்தியெய்திய பாடங்கள்:.........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

8.2 க.பொ.த (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள்
இரண்டாவது அமர்வு:
i. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்:-............................
ii. சுட்டிலக்கம் ;..........................
iii. சித்தியெய்திய பாடங்கள் ..............................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

09. தொழில்சார் தகைமைகள்:- (பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்.)
.................................................................................................................................
..........................................................................................................

10. ஏனைய தகைமைகள் ....................................................................................................
..........................................................................................................

11. குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

11.1 ஆம் எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக? ..........................................................................................
................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

i. பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :.........................................................
ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்:.................................................................
iii. செலுத்திய தொகை:.........................................................................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை

அ. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

ஆ. என்னால் செய்யப்பட்டுள்ள இப் பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

இ. ரூபா ................ செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

ஈ. மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

உ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

.............................. ....................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளதாகவும் அவர் ................................ ஆம் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின் கீழ் ஒப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

.............................. ....................................
திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:.................................
பதவிப் பெயர்:.........................................
முகவரி:................................................
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)

15. திணைக்களத் தலைவரின் பரிந்துரை:
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

15.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள், வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ இல்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

15.2 விண்ணப்பிப்பவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும் /விடுவிக்கப் படமுடியாது.

திகதி :.......................... ...............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப் படிவத்தில் தலைப்பு இல 06.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர் | நகரங்கள்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

09-536

---

## பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு

### இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2018 (I) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (II)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2018 (I) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (II) ஆனது பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தல் என்பவற்றின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தினால் 2019.10.05 ஆந் திகதி முதல் 2019.10.26 ஆந் திகதி வரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சை கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ளவாறு நடைபெறும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAS 1 |
| 2. | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLES |
| 3. | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLSS |
| 4. | இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLArS |
| 5. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAcS 1 |
| 6. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLPS 1 |
| 7. | மேற்குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமான ஏனைய சேவைகள் | Other |
| 8. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAS 2 |
| 9. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLAcS 2 |
| 10. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLPS 2 |

3. அலுவலர் தாம் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாக மற்றும் ஒன்றுக்கொன்று முரணான தடவைகளில் தோற்றலாம். ஆயினும், விதித்துள்ள காலப்பகுதியினுள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே நிகழ்த்த முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப்பக்கத்தில் வலது பக்கமுள்ள பட்டியலில் "Examination" என்னும் நீட்சியின் ஊடாக "பரீட்சைப் பிரிவுக்கு (Examination Division)" பிரவேசித்து தமக்குரிய பரீட்சையினைத் தெரிவுசெய்வதன் மூலம் விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்பிக்கொள்ள முடியும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்புவதற்கு 2019.09.06 ஆந் திகதி மு. ப. 8.00 மணி தொடக்கம் 2019.09.23 ஆந் திகதி இரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்.-** முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எந்தவித பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகைய நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

இலங்கை நிர்வாக சேவையின், இலங்கைக் கணக்காளர் சேவையின் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒரு பரீட்சை என்றும், இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இன்னொரு பரீட்சை என்றும் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இலங்கைப் பொறியியல் சேவையின், இலங்கை விஞ்ஞான சேவையின் மற்றும் இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணத்தை இலங்கை நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) "SLIDA" கணக்கிற்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். "SLIDA" கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டுத் தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது "SLIDA" என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும் போது அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

இணையத்தில் நிகழ்நிலையில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது இணையத்தின் நிகழ்நிலை முறையினூடாக (Online) அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பரீட்சார்த்தியின் பிரத்தியேகக் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இணையத்தின் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பத்தினை நிரப்பும் போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் நிறுவனம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் தேவைப்படின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2019.09.06 ஆந் திகதி முதல் 2019.09.23 ஆந் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினைத் திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தியொருவர் தனக்கு உரித்துடையதற்ற மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணபப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்படமாட்டார்.

12. **பரீட்சை நடைமுறை**.- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :-

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் "எ" வின் இணைப்பு).

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-I |
| | | இலங்கையின் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 01-II |
| | | குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-III |
| 02 | நிர்வாகம் | | 3 மணித்தியாலங்கள் | 02-I |
| பரிசோதகர் (வேலைதளம்) | - தரம் III |
| பரிசோதகர் (இயக்கத்தளம்) | - தரம் III |

02. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.09.27 ஆகும். அனைத்து விண்ணப்பங்களும் அத்தினத்திற்கு முன்னதாக புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. இல. 355, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். எந்த விண்ணப்பமும் தனிப்பட்ட ஒருவராலோ அல்லது நேரடியாக கையளித்தலோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூரணமற்ற, விதிமுறைக்கு உட்படாத தேவையான தகுதிகள் அற்ற, தகுந்த முறையில் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் எந்த ஒரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையினூடாக வரும் விண்ணப்பங்கள் அந்த அந்த அலுவலக தலைவரின் ஊடாக குறித்த தினத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இப்பதவி தொடர்பாக தகுதியான நேர்முக பரீட்சை நடாத்தப்படுவதுடன், எழுத்து பரீட்சை நடைபெறமாட்டாது.

03. புகையிரத திணைக்களத்தின் சேவைகளின் அத்தியாவசியத்தின் அடிப்படையில் வெற்றிடங்கள் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி மேற்கூறப்பட் பதவிகளில் ஒரு பதவிக்கு நியமிக்கப்படுவதுடன். நியமனம் பெற்ற பின்னர் பதவிகள் தொடர்பாக மாற்றம் ஏதும் நிகழ்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

04. **பதவிக்கான கடமைகள் :**

**பரிசோதகர் (பாதை) - தரம் III**

புகையிரத இயக்கத்திற்கு முறையான வகையில் புகையிரத பாதை தொகுதியினை புதிதாக உருவாக்குதல், புதுப்பித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பரிசோதகருக்குரிய கடமைகளை சரிவர செய்தல்.

**பரிசோதகர் (பாலம்) - தரம் III**

புகையிரத இயக்கத்திற்கு முறையான வகையில் புகையிரத பாலம் தொகுதியினை புதிதாக உருவாக்குதல், புதுப்பித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பரிசோதகருக்கு கடமைகளை சரிவர செய்தல்.

**பரிசோதகர் (கட்டிடம்) - தரம் III**

கட்டிடங்கள் மற்றும் வியூகங்களை புதுப்பித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பரிசோதகருக்குரிய கடமைகளை சரிவர செய்தல்.

**பரிசோதகர் (வேலைத்தளம்) - தரம் III**

புகையிரத என்ஜின் மற்றும் சாரதி பெட்டி மற்றும் அறைகளில் நடைபெறும் இயந்திர கோளாறுகளை அறிந்து பழுதுபார்த்தல், செயற்படுத்தல் மற்றும் அவ் இருக்கைகள் மற்றும் படுக்கைகள் சேவையில் ஈடுபடுவதற்கு முன்னர் பயணித்து பரிசீலனை செய்து சான்றுபடுத்துதல் அக்காரியங்களுக்கு தொடர்பாக இயந்திர, மேலதிக பகுதிகள் தேவைக்கேற்ப களஞ்சியப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், வேலைதளங்களுக்கு ஏற்ற இயந்திரங்களை செயற்படுத்துதல் தொடர்பான பரிசோதகருக்கு கடமைகளை சரிவர செய்தல்.

**பரிசோதகர் (இயக்கத்தளம்) - தரம் III**

புகையிரத பயணத்திற்கு உகந்த வகையில் என்ஜின் பெட்டி உள்ளடக்கப்பட்ட வேறு இயந்திரங்களை புதுபித்தல், செயற்படுத்துவதற்குரிய அவசியமான மேலதிக பகுதிகளை புதிதாக உருவாக்குதல் மற்றும் புதுபித்தலுக்கு பின்னர் அவ் புகையிரத என்ஜின் பெட்டியை சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் பயணித்து பரிசீலனை செய்து சான்றுபடுத்துதல் அக்காரியங்கள் தொடர்பாக இயந்திர, மேலதிக பகுதிகள் தேவைக்கேற்ப களஞ்சியப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், வேலைதளங்களுக்கு ஏற்ற இயந்திரங்களை செயற்படுத்துதல் தொடர்பான பரிசோதகருக்குரிய கடமைகளை சரிவர செய்தல்.

05. **சம்பள அளவுத்திட்டம்**.-

(i) 03/ 2016 ஆம் இலக்க திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன் படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 34,130.00 - 05 × 495 - 05 × 575 - 10 × 720 - 10 × 745 = ரூபா 54,130.00 எனினும், ரூபா 54,130.00 எனினும், ரூபா 30,604.00 அடிப்படை சம்பளமாக கொடுக்கப்படும்.

(ii) இதற்கு மேலதிகமாக அரசாங்க சேவைகள் தொடர்பாக அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகள் தொடர்பிலும் உரிமை உண்டு.

(iii) நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் "அக்ரஹார" காப்புறுதியின் கீழ் செலவளிக்கப் பட்ட தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ள இயலும்.

(iv) சேவையின் அடிப்படையில் அரச மனைகளை பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு.

06. (அ) **கல்வித் தகைமை**:-

(i) சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞான மற்றும் வேறு ஒரு பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களுக்கு (06) கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல் வேண்டும்;

மற்றும்

(ii) பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களுக்கிடையில் இரண்டு பாடங்களுக்கு விஞ்ஞான/கணித பிரிவிற்குரிய மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தர) பரீட்சையில் சித்திப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- மேற்கூறப்பட்ட (அ) 1 மற்றும் 2 குறிப்பிட்ட கல்வித்தகைமைகள் உடன் பின்வரும் தொழிற்தகைமைகளில் ஒன்றினை விண்ணப்பதாரி பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்

அல்லது

(ii) தேசிய பயிலுநர் சபை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியலாளர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

(iii) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் ;

அல்லது

(iv) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதவிக்கு உரிய பிரிவில் தேசிய தொழிற் தகைமை (NVQ 6) இக்குறிய படிப்பினை கற்று இருத்தல் வேண்டும்.

(அதற்குரிய பிரிவுகளாக கீழ்வருவன அமைந்திருத்தல் வேண்டும்)

(i) புகையிரத பரிசோதகர் (பாதை)/ புகையிரத பரிசோதகர் (கட்டிடம்)/ புகையிரத பரிசோதகர் (பாலம்) சிவில் பாடப்பிரிவின் கீழ் குறித்த தகுதிகளை பூரணமாக பெற்று இருத்தல் வேண்டும்.

(ii) புகையிரத பரிசோதகர் (வேலைத்தளம்)/ புகையிரத பரிசோதகர் (இயக்கத்தளம்) - இயந்திர/ மின் மற்றும் இலத்திரனியல் பாடப்பிரிவின் கீழ் பூரணமான தகுதியினை பெற்று இருத்தல் வேண்டும்.

(இ) **வேறு தகுதிகள்**:-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த ஆளுமையை பெற்றிருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பிப்பதற்குரிய தகுதியினை ஆண் விண்ணப்பதாரி மாத்திரமே பெறுவர்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு மேற்கூறப்பட்ட தகுதிகள் அனைத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை**.- மேற்கூறப்பட்ட (06) இல் கூறப்பட்டவாறு தகுதிகளை பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகளுக்காக முறையான நேர்முகபரீட்சை நடாத்தப்பட்டு திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்ட வேலையில் இடம் பெறும் வெற்றிடங்களுக்கு மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் அன்று இடம்பெற்ற நேர்முக பரீட்சையினை கொண்டு எதிர்காலத்தில் மீண்டும் வெற்றிடங்கள் நிரப்பப்பமாட்டாது.

08. **ஆட்சேர்ப்புத் திட்டம்** .- முறையான நேர்முக பரீட்சையில் 50% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் சித்தி பெற்றவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவர். புள்ளிகள் பெற்றுக்கொண்ட அடிப்படையில் வெற்றிடங்களுக்கு சமனான எண்ணிக்கையில் அடிப்படை தகுதியினை கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து தெரிவு செய்யப்படும்.

1. **புகையிரத பரிசோதகர் சேவையில் பரிசோகதர் (பாதைகள்/கட்டிடம்/பாலம்) பதவிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான நேர்முகமாக பரீட்சையில் புள்ளிகள் வழங்குவதற்கான ஆட்சேர்ப்பு பேரணை - மொத்த புள்ளிகள் 100 ஆகும்**.

முறையான நேர்முகப் பரீட்சை இரண்டு பகுதிகளாக இடம்பெறும்.

(i) **நேர்முகப் பரீட்சை**: கீழ்வரும் பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் பிரதான பொறியியலாளரை பாதைகள் மற்றும் அலுவலகர் உப திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விருப்பம் மற்றும் அரசாங்க சேவையின் நீண்ட நாள் இருப்பதற்கான விருப்பத்தை பரிசீலனை செய்தல்.
(வழங்கப்படும் புள்ளிகள் - 40 ஆகும்.)

(அ) புகையிரத பாதைகள் தொடர்பான அறிவு

(ஆ) Formation உருவாக்குவதற்கான அறிவு, Geotechnical Engineering தொடர்பான அறிவு, கணித அறிவும் பரிசீலனை செய்யப்படும்.

(இ) Abutment தொடர்பான அறிவு, பாலம் தொடர்பான அறிவு (Sub Structural & Super Structural தொடர்பான) Structural பொறியியலாளர் அறிவினை பரிசீலனை செய்தல்.

(ஈ) கட்டிடங்கள் கட்டுவதன் தொடர்பான அறிவு பாதைகள் உருவாக்குவது தொடர்பான அறிவு, Foundation (அத்திவாரம்) உருவாக்குவது தொடர்பான அறிவு, கட்டிட பொருட்கள் தொடர்பான அறிவு, கட்டிடங்கள் ஒழுங்கமைத்தல் தொடர்பான அறிவு.

(உ) கணினி பாவனை தொடர்பான அறிவு, இயந்திர அறிவு மற்றும் மின் இயந்திர அறிவு.

(ஊ) அளவியல் தொடர்பான அறிவு, (Surveying & Leveling)

(ii) **செயன்முறை பரீட்சை**: மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக செயன்முறை அறிவு பரீட்சிக்கப்படும். அதற்கு மேலதிகமாக உருவாக்குதல் தொடர்பாக வேறு திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த சேவைகாலம் கருத்தில் கொள்ளப்படும்.

(வழங்கப்படும் மொத்த புள்ளிகள் - 60 ஆகும்.)

2. **புகையிரத பரிசோதகர் சேவையில் பரிசோகதர் (பாதைகள்/ கட்டிடம்/ பாலம்) பதவிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான நேர்முகமான பரீட்சையில் புள்ளிகள் வழங்குவதற்கான ஆட்சேர்ப்பு பேரணை - மொத்த புள்ளிகள் 100 ஆகும்.**

முறையான நேர்முகப் பரீட்சை இரண்டு பகுதிகளாக இடம்பெறும்.

(i) **நேர்முகப் பரீட்சை**

கீழ் கூறப்படும் விடயங்களை கருத்தில் கொண்டு பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் பிரதான பொறியியலாளர் இயந்திரம் மற்றும் பிரதான பொறியியலாளர் இயக்கத்தளம் உப திணைக்களங்களினுடைய கடமைகள் தொடர்பாக விருப்பம் மற்றும் அரசாங்க சேவையின் நீண்ட காலம் ஈடுபடவிருக்கும் விருப்பம் பரீட்சிக்கப்படும்.
(வழங்கப்படும் புள்ளிகள் - 40 ஆகும்.)

(அ) பாரமான டீசல் என்ஜீன் தொடர்பான அறிவு (Heavy Diesel Engine)

(ஆ) டீசல் என்ஜீன் மூலம் தொழிற்படும் மின் தொகுதி, மின் மோட்டார் மற்றும் இலத்திரனியல் தொகுதி தொடர்பான அறிவு.

(இ) Heavy Diesel என்ஜீன் தொழிற்படுத்துதல் தொடர்பான அறிவு.

(ஈ) PLC, Micro Processor Controller தொகுதி தொடர்பான அறிவு.

(உ) கணினி தொடர்பான பாவனை பற்றிய அறிவு மற்றும் தேவையான இயந்திர அறிவு.

(ஊ) உள்ளரங்க மற்றும் வேறு மின் தொகுதி தொடர்பான அறிவு.

(எ) வாயு மின் தொகுதி தொடர்பான அறிவு மற்றும் தொழிற்படுத்துதல்.

(ஏ) நுண்ணிய இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அறிவு.

(ii) **செயன்முறை பரீட்சை**: மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக செயன்முறை அறிவு பரீட்சிக்கப்படும். அதற்கு மேலதிகமாக பாரமான டீசல் என்ஜீன் தொழிற்படுத்துதல், மின் தொகுதியினை தொழிற்படுத்துதல் வேறு திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த சேவைகாலம் கருத்தில் கொள்ளப்படும்.

(வழங்கப்படும் மொத்த புள்ளிகள் - 60 ஆகும்.)

09. விண்ணப்பத்தினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பூரணப்படுத்துவதற்கான விளக்கம்

(i) விண்ணப்பம் A4 (அச்சிடப்பட்ட கடதாசி) பிரமாணத்தில் இரு பக்கமும் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பம் விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.) விண்ணப்பத்தில் :

1 ஆம் பக்கத்தில் 01 தொடக்கம் 08 வரை,

2 ஆம் பக்கத்தில் 09 தொடக்கம் 12 வரை,

3 ஆம் பக்கத்தில் கையொப்ப சான்று மற்றும் திணைக்களத்தின் /நிறுவனப் பிரதானியின் சான்று உள்ளடக்கப்பட வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக அமையாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றினை தம் வசம் வைத்திருப்பது உபயோகமானது மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருக்கின்றதா என்பதை விண்ணப்பதாரி அறிந்து இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை ஒழுங்குபடுத்தும் போது தலைப்பில் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்பத்திரத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் நிரப்பப்படல் வேண்டும்.

(ii) குறித்த முறையான நேர்முக பரீட்சை தொடர்பாக ரூபா 600 அறவிடப்படும். அக் கட்டணத்தினை நகர மத்தி மக்கள் வங்கியில் புகையிரத பொது முகாமையாளரின் கணக்கு இல. 176-1-001-2-9027313 இற்கு வரவு வைத்து வைப்பில் இட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். வேறு முறையில் கட்டணம் செலுத்தப்படுமானால் அக்கட்டணங்கள் நிராகரிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக கொடுக்கப்படும் கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் திரும்பி வழக்கப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பரிசோதகர் தரம் III இற்கு இணைந்து கொள்ளுதல் - 2019" என்று எழுதப்படல் வேண்டும்.

(iv) திறந்த விண்ணப்பதாரிகளின் விண்ணபத்தினது கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்.-

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்து சான்றுப்படுத்தப்பட வேண்டும். எந்த ஒரு அலுவலகத்தில் இவ் நேர்முக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தங்கள் கையெழுத்தினை அலுவலக பிரதானி அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்தாவது கையெழுத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரி தங்களது கையெழுத்தினை அரசாங்க பாடசாலை அதிபர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், நீதிபதி, வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படை அதிகாரி, ரூபா 240,360 அல்லது அதற்கு மேலதிகமாக அல்லது மாதாந்த ஒன்றிணைக்கப்பட்ட சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர உயர்தர உத்தியோகத்தர் மூலமாக உறுதிப்படுத்திக்கொள்ளப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருப்பவராயின் தங்கள் அண்மையில் உள்ள அலுவலக தலைவரினால் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் இவரது விண்ணப்பப்பத்திரம் அலுவலக தலைவரின் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(vi) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகுதியுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்து உள்ளனர் என்ற பூரண பரிசீலனையின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயது எல்லையினை உடையவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னதாக முறையான நேர்முகப் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கு உரிய பற்றுச்சீட்டினை முன்வைத்து பரீட்சைக்கு முகம் கொடுக்கும் விண்ணப்பதாரியின் கையெழுத்து மற்றும் கையெழுத்தை உறுதிப்படுத்தல் தேவையின் பொருட்டு மட்டும் திணைக்கள தலைவரின் சான்றிதழுடன், முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு நேர்முக பரீட்சைக்காக அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். இவ்வனுமதிப்பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர் என்பதனை உறுதிசெய்து கொள்ளல் ஆகாது. விண்ணப்பதாரி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதியினை பெற்றுள்ளாரா என பரிசீலனை செய்யும் வேலையில் தகுந்த தகுதியினை பெறவில்லை என தீர்மானிக்கப்பட்டால் அப்போது விண்ணப்பதாரி பரிசார்த்த நிலையில் இருந்து இரத்து செய்யப்படுவார்.

**10. சேவைக்கான ஒப்பந்தம் :**

ஆட்சேர்ப்பு செய்யப்படுவது புகையிரத பரிசோதகர் சேவை தரம் 3 என்பதுடன் குறித்த சம்பள அளவினை ஆரம்ப சம்பளமாக கொடுக்கப்படும்.

**11. சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தம்:-**

(1) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உடன்படல் வேண்டும். தற்போது விதவை/தபுதாரன் மற்றும் அநாதை, ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு ஈடுபட்டிருப்பின் அது தொடர்ந்து இடம்பெறும்.

(2) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/ 2007 இன் விதிமுறைக்கமைய அரசாங்க சேவையில் ஈடுபடும் மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகருமமொழி தொடர்பான திறமையினை 05 வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அத் திறமையினை பெற்றிராத உத்தியோகத்தரின் சம்பள அளவானது தகுதியினை பெறும் வரை இடை நிறுத்தப்படும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தாபன விதிக்கோவை நிதி ஒழுங்குவிதி தொடர்பான விதி முறைகளையும், அரசாங்க ஆணைக்குழு சபையினால் பிரசுரிக்கப்படும் சேவை ஆட்சேர்ப்பு கோவையில் உள்ள விதிமுறைகளின் கீழ் கடமையாற்றல் வேண்டும். அத்துடன் இடையிடையே அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்படும் தீர்மானங்கள் திணைக்கள அறிவுரையின் அடிப்படையில் செயற்படுத்துதல் வேண்டும்.

(4) ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரிகளிடமும் திணைக்களத்தினூடாக முறையான பயிற்சி வழங்கப் படுவதுடன், அதன் பின்னர் 10 வருட சேவைக்காலம் தொடர்பாக ஒப்பந்தம் இடப்படும். ஒப்பந்தத்தை நிராகரித்தால் 1,000,000.00 ரூபாவினை திணைக்களத்திற்கு வழங்குவதற்கு விண்ணப்பதாரி தயாராக இருத்தல் வேண்டும்.

12. இவ் அறிவித்தலில் கூறப்படாத ஏதேனும் ஒரு தகவல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்குரிய அதிகாரம் புகையிரதப் பொது முகாமையாளருக்கே உரியது. புகையிரத பரிசோதகர் சேவையில் இடம்பெறும் ஆட்சேர்ப்பு முறை அனைத்தும் இவ் அறிவித்துடன் தொடர்புபட்டதாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றிற்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

எம். ஜே. டி. பெர்னாந்து,
புகையிரதப் பொது முகாமையாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பரிசோதர் தரம் III இற்கு இணைத்து கொள்ளுதல் - 2019**

External Recruitment For The Post In Railway Supervisory Management Service Grade III - 2019

1. பரீட்சைக்காக தோற்ற இருக்கும் மொழி
சிங்களம் - 02
தமிழ் - 03 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2. குடியுரிமை
பரம்பரையாக - 01 ☐
பதிவு செய்யப்பட்ட - 02

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

விண்ணப்பிக்கும் பதவி
..................................................................
..................................................................

01. முழுப்பெயர் :-
(i) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) சிங்களத்தில்/தமிழில் :----.

02. முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் :-
(i) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: GUNAWARADHANA, H. M. S. K.)
(ii) (சிங்களத்தில்/தமிழில்) :----.

03. நிரந்தர முகவரி :----.
(i) சிங்களத்தில்/தமிழில் :----.
(ii) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

04. பால் : ஆண் - 0 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்) ☐
பெண் - 1

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. இனம் :
சிங்களம் - 1, இலங்கைத் தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, பறங்கியர்-5, மலாயர் - 6 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

07. வதிவிடம் :

(i) கிராம அலுவலர் பிரிவு :----.

(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(iii) மாவட்டம் :----.

08. பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

09. 2019.09.27 ஆந் திகதியிலுள்ளவாறு வயது :-

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

10. கையடக்க தொலைபேசி இல : ☐☐☐☐☐☐☐☐☐☐

11. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. தரம்) :

வருடம் : .............................. சுட்டெண் : ...........................

| | பாடம் | சித்திகள் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |

(ii) க. பொ. த. (உயர்/தரம்) :

வருடம் : .............................. சுட்டெண் : ...........................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

(iii) தொழிற் தகைமைகள் :----.

12. நீங்கள் என்றாவது செய்த தவறுக்காக சிறை தண்டனை பெற்றதுண்டா?

(குறித்த கூட்டினுள் X அடையாளமிடுக) (ஆம் என்றால் காரணத்தை குறிப்பிடவும்) :

ஆம் ☐ இல்லை ☐

..........................................................................................................................................

13. பரீட்சார்த்தியின் சான்றுரை:-

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என என்னால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதில் ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாவிடினும் அல்லது/ மற்றும் தவறான தகவல்

ஆயினும் அல்லது/மற்றும் பிழையான முறையில் நிரப்பப்பட்டிருப்பின் பரீட்சார்த்தி நிலை நிராகரிக்கப்படும் என அறிந்துள்ளேன். அதற்காக பொறுப்பு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஆ) மேற் கூறப்பட்ட (அ) வில் கூறப்பட்ட தகவல்கள் பிழையானவை என நான் பதவி ஏற்ற பின்னர் அறியவருமாயின் பரீட்சார்த்தி நிலை நிராகரிக்கப்படும் என அறிந்துள்ளேன். அதற்காக பொறுப்பு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ) ......... ஆந் திகதி தபாலகத்திற்கு 600.00 ரூபா கட்டணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன்.

| |
|---|
| (விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச் சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.) |

(ஈ) இப்பரீட்சை ஒப்பந்தத்திற்கு நான் உடன்படுகின்றேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு நான் உடன்படுவேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................ (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ....................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

15. திணைக்களத் தலைவரின் சான்றுரை:-

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................................... என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், ............. ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் பரீட்சை கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும், இந்நியமனம் அவருக்கு கிடைக்கப்பெற்றால் இங்கு அவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார் என நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் /அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

9-301

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## மதுவரிக் காவலாளர் சாரதி பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2019

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.09.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

03. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :- ரூபா. 29,540 -7 × 300 - 27 × 370 - 41,630 உரித்துடையதாகும். ரூபா 29,540 மாதாந்த சம்பளப் படிநிலையில் வைக்கப்படும். (அ.நி.சு. 3/2016 இன்படி RS01-2016 (PC). மேற்படி சம்பள அளவுத்திட்டத்தின் ரூபா 30,440 சம்பளப் படிநிலையை விஞ்சுவதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையொன்று உண்டு.

04. **வயதெல்லை** :- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.(ஏற்கனவே அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் பொருட்டு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

05. பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று எல்லா முறையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. **கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத் தராதர(சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல், இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ் / சிங்களம் மற்றும் மற்றுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் கணிதம் அடங்கலாக ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

II. **தொழில்சார் தகைமை:-**

(a) நெடுஞ்சாலை சட்டவிதிகள் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல்.
(b) மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்.
(c) மோட்டார் பஸ் வண்டி, மோட்டார் கோச் 'ஏ' வகுப்பு ஓட்டுவதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சாரதி உரிமத்தைக் கொண்டிருத்தல்.

III. **சேவை அனுபவம்:-**

செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டதன் பிற்பாடு சாரதியாக, ஏற்றுக்கொண்ட நிறுவனம் ஒன்றில் 03 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

IV. **உடல்சார் தகைமை**

(a) உயரம் குறைந்தபட்சம் 5அடி 04அங்குலமாக இருத்தல்.
(b) மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 32அங்குலமும் இருத்தல் வேண்டும்.
(c) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடிவில்லை( கொன்டாக்ட் லென்ஸ்) இன்றி பொருட்களைப் பார்க்கும் ஆற்றல் ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 கண்பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(d) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல், உள இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **வேறு தகைமைகள்:-**

விண்ணப்பதாரர், இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை**.- தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கும் தொழில்சார் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவர். பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும். தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(i) **எழுத்துமூலப் பரீட்சை**: இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதி பதவி பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பரீட்சை

| *பாடங்கள்* | *காலம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தி பெறுதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நெடுஞ்சாலை சட்டங்களும் மோட்டார் இயந்திர விஞ்ஞானமும் | 03 மணி | 100 | 40% |
| 2. பொதுப் பரீட்சை | 01 மணி 30 நிமி. | 100 | 40% |

**பரீட்சைக்கான விடயப் பரப்பு**:

| *வினாத்தாளின் பெயர் :* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1. நெடுஞ்சாலை சட்டங்களும் மோட்டார் இயந்திர விஞ்ஞானமும் | நெடுஞ்சாலை சட்டங்கள் பற்றிய அறிவு, தொழில்நுட்ப விடயம் பற்றிய அறிவு, அத்துறை சார்ந்த அடிப்படைப் பிரச்சினை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்கான வினாத்தாளாகும். |
| 2. பொதுப் பரீட்சை | விண்ணப்பதாரியின் பொது அறிவைப் பரிசீலிப்பதற் கான வினாத்தாளாகும். |

நடத்தும் அதிகார பீடம்: நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

(ii) **தொழில்சார் பரீட்சை**.- வாகனம் செலுத்தும் ஆற்றலை அளவிடும் பிரயோக பரீட்சையாகும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தி பெறுதற்கான புள்ளிகள்* |
|---|---|---|
| வாகனம் செலுத்தும் ஆற்றல் | 40 | 40% |

(iii) அவ்வெழுத்துப் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்கினரை உடல்சார் தகைமைப் பரீட்சை மற்றும் வாகனம் செலுத்தும் பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தி அவர்கள் அவற்றில் பெற்ற புள்ளிகள் மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தர ஒழுங்கின் பிரகாரம் மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவர்.

07. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** .- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். இது மதுவரித் திணைக்கள கட்டளைகளின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற சீருடை(யுனிபோர்ம்) அணியும் பதவியொன்றாகும்.

08. ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க, 2009.02.20 ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளில் காட்டப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் என்பன ஏற்புடையனவாகும்.

09. இந்நியமனத்திற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் கருத்திற் கொள்ளப்படாத விடயம் ஏதும் இருப்பின் அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட்டு அதற்கான தீர்மானம் எடுக்கப்படும்.

10. விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் ஒளிப்படப் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) தனது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ்
(ii) நற்சான்று பற்றி அண்மையில் பெற்றுக்கொண்ட 02 நற்சான்று சான்றிதழ்கள். அவற்றில் ஒன்று தான் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரிடமிருந்து/ பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட நற்சான்று சான்றிதழாக இருத்தல் வேண்டும்.
(iii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
(iv) மோட்டார் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.
(v) விசேட தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்கள்.

11. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பில் பிரயாணச் செலவு போன்றன செலுத்தப்பட மாட்டாது.

எச். ஜி. சுமணசிங்ஹ,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

2019.08.30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதி பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

01. (அ) முழுப் பெயர் (தாய் மொழியில்) : ..............................................

(ஆ) முழுப் பெயர்(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..............................................

02. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: ..............................................

03. தற்போதைய முகவரி : ..............................................

(அ) நிரந்தர முகவரி : ..............................................
(ஆ) பொலிஸ் நிலையம் :..............................................

04. நீங்கள் இலங்கைப் பிரசையா என்பதுபற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) (பதிவின் மூலமாகவாயின் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்) ..............................................

05. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது பற்றி: ..............................................

06. பிறந்த திகதி :
ஆண்டு : ............................... மாதம் : ............................... திகதி : ...............................

07. வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :-
வருடங்கள் :............................... மாதங்கள் :............................... நாட்கள் :...............................
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)

08. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளை குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
09. வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் படி பெற்றுள்ள அனுபவங்கள் பற்றி சான்றுப்படுத்திய ஆவணங்களை விண்ணபத்துடன் இணைத்தல் வேண்டும்.
10. மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) .......... செ.மீ. ( .........அங்குலம்)
11. உயரம் ............................... செ.மீ. (..........அடி..........அங்குலம்)
12. எழுத்து, தொழில்சார் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நீங்கள் விண்ணப்பிக்கும் மொழிமூலம்:

சிங்களம் : ☐ தமிழ் : ☐

13. விண்ணப்பதாரரைப் பற்றி விசாரித்து அறியக்கூடிய இருவரின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் :-
(i) ......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
(ii) ......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
14. நீங்கள் இதற்கு முன் அரசாங்கத்தில் / மாகாண அரசாங்கத்தில் ஏதேனும் பதவியொன்றை வகித்திருப்பின் அதுபற்றிய விபரம். அந்தப் பதவியிலிருந்து விலகியிருப்பின் அதற்கான காரணத்தை குறிப்பிடவும். ......................................
......................................................................................................................

15. தற்போதைய பதவியும் சேவை நிலையமும் : ..............................................................................
..........................................................................

என்னால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் பொய்யானவை அல்லது தவறானவை என நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின், நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

..................................................
திகதி: ................................ விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9-389

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் | தபால் செலவு |
|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. |
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | தபால் செலவு |
|---|---|---|
| I ஆவது பகுதி : | ரூபா ச. | ரூபா ச. |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2019***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2019 |
| | | வியாழன் | 12.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2019 |
| | | வெள்ளி | 20.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2019 |
| | | வெள்ளி | 27.09.2019 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.09.2019 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2019 |
| | | வெள்ளி | 11.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2019 |
| | | வெள்ளி | 18.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2019 |
| | | வெள்ளி | 25.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2019 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2019 |
| | | வெள்ளி | 08.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2019 |
| | | வெள்ளி | 15.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2019 |
| | | வெள்ளி | 22.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2019 |
| | | வெள்ளி | 29.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2019 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.